பள்ளி ஆலோசனைச் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர் பிரதிநிதியாக
நீங்கள் பின்வரும் விடயங்களைப் பற்றி சேர்ந்து முடிவெடுக்கலாம்.

பள்ளிநிகழ்ச்சி
பள்ளியினதும் மற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்புச் சம்பந்தமான
ஒப்பந்தங்களினது தீர்மானம்
முழுநாள் நிகஸிச்சிகள், பராமரிப்பு வசதி செய்து கொடுக்கும் நிறுவனம்
வீட்டுவேலைகளின் பரிமானமும் வழங்கலும்
பள்ளிச் சட்டத்தின் சமர்பணம் அல்லது மாற்றம்
பொதுவான வளர்ப்புப் பிரச்சனைகள் அதாவது
படிப்பு, வளர்ப்பு ஒப்பந்தங்களின்
தீர்மானம் என்பவற்றுடன் செயற்படுவதற்கான திட்டங்கள்
உபகரணங்கள், படிப்பிப்பதற்கானபொருட்கள் என்-பவற்றை அறிமுகம் செய்தல்,
வாங்குதல்
பள்ளி நிர்வாகத்தின் தீர்மானம்
சுதந்திரமாகத் தீர்மானிக்கக்கூடிய விடுதலை நாட்களைத் தீர்மானித்தல்
பெற்றோருக்கான தகலல்கள், ஆலோசனைகளுக்கான திட்டங்கள், செயற்பாடுகள்
அதற்கும் மேலாக மேலும் பல பள்ளி ஆலோசனைச் சபை முடிவுகளில் பங்கு
கொள்ளலாம்.

நோட்ரைன்- வெஸ்பாலின் பள்ளிச்சட்டம் நீங்கள் உங்கள் பிள்ளைகளின் பள்ளிவாழ்க்கையை எவ்வாறு சேர்ந்துதிட்டமிடலாம் என்பதையும் பாடத்திட்டம், பாடவமைப்புகளில் நீங்கள் எவ்வளவு பங்குகொள்ளலாம் என்பதையும் தீர்மானிக்கும்.
வகுப்பு ஆசிரியைகள், ஆசிரியர்களைப் பார்த்துப் பேசுங்கள் .நம்பகரமான ஒத்துழைப்பும் மதிப்பான, வெளிப்படையான உரையாடலும் ஒரு வெற்றிகரமான இணைப்புக்கும், நல்ல பள்ளிச்செயற்பாட்டிற்கும் உதவியாகவிருக்கும்.

மேலதிக விபரங்களை நீங்கள் கொள்வனவு செய்வதன் மூலமோ அல்லது இன்ர னெட் மூலமோ பெறக்கூடிய மாவட்ட தகவல் மடலில் பெற்றுக் கொள்ளலாம்.
https://broschueren.nordrheinwestfalendirekt.de
தேடும் விடைச்சொல்: Elternmitwirkung in der Schule

www.bildung-in-bielefeld.de

**Stadtelternrat Bielefeld e.V. ©**
www.stadtelternrat-bielefeld.de

**Schulamt für die Stadt Bielefeld**
Untere staatliche Schulaufsichtsbehörde
Niederwall 23, 33602 Bielefeld
www.bezreg-detmold.nrw.de

**Herausgegeben von:**
**Stadt Bielefeld**
Kommunales Integrationszentrum

Neues Rathaus Niederwall 23, 33602 Bielefeld
www.ki-bielefeld.de

**Verantwortlich für den Inhalt:**
Nilgün Isfendiyar
Leiterin des Kommunalen Integrationszentrums

Kommunales Integrationszentrum Bielefeld

Das Kommunale Integrationszentrum wird gefördert durch:

Ministerium für Kinder, Familie, Flüchtlinge und Integration des Landes Nordrhein-Westfalen

Ministerium für Schule und Bildung des Landes Nordrhein-Westfalen

Stand: April 2020

# Stadt Bielefeld
# Elternmitwirkung in der Grundschule
## Tamilisch

www.bielefeld.de




ொடக்கப்பள்ளியில்
பெற்றோர் பங்கேற்பு

## அன்புப் பெற்றோர்களே !

பாடசாலை என்பது குடியரசைக் கற்பிப்பதுடன் அதைச்
செயல்படுத்தும் இடமுமாகும். எங்கள் பிள்ளைகளினது
வளர்ப்பிலும் படிப்பிலும் பங்குகொள்ளும் நாங்கள்
கல்விசம்பந்தமான பள்ளிவாழ்க்கையை சேர்ந்து
முடிவெடுப்போம். அதில் பொற்றோர்அகிய நீங்களும்
சேருவீர்கள்.

## வகுப்புப்பராமரிப்புக்குக்குழு

வருடத்தொடக்கத்தில் ஒரு வகுப்பின் எல்லப்
யெறோர்களும் ஒரு வகுப்புப் பராமரிப்புக்
குழுவையும் அதற்கு ஒரு தலைவி அல்லது தலைவன்
அதுபோல பெண் அல்லது ஆண் பதில்
பிரதிநிதியையும் தெரிவுசெய்வார்கள்.





ஒரு வகுப்புப்பராமரிப்புக்குழுவின் தலை லவி
தலைவன் தேர்தலுடன் பல பெற்றோகள் தொட
ர்புகொண்டு கதைக்கக்கூடிய பெற்றோர்குழுவின்
கூட்டுஅமைத்தலும் ஒரு நல்ல விடயம். வகுப்பு
ப்பராமரிக் குழுவின் சந்திப்பில் வகுப்புஆசிரியை
அல்லது ஆசிரியனின் செயற்பாடு ஆலோசனையும்
தகவல்களும் வழங்குவதாகும். பின்வரும் விடயங்கள்
உள்ளடக்கரீதியாக ஆராயப்படும்.
பாடக்கருவிகளின்அறிமுகத்திற்கான தூண்டுதல்
செயற்திறன்களின் மேற்சோதனைகள்
வீட்டுவேலைகள்
பள்ளிவிழாக்கள் 1 வகுப்புப் பிரயாணங்கள்
வளர்ப்புச்சம்பந்தமான கேள்விகள்

ஒரு. வகுப்பின் வகுப்புப்பராமரிப்புக்குழுவின்
தலைவி அல்லது தலைவன்பெற்றேரின்
விருப்பங்கள்தூண்டல்கள்என்பவற்றை
பள்ளிப்பராமரிப்புக் குழுவிற்கு எடுத்துச்செல்வார்.

தொடரும் பக்கங்களில் நாங்கள் உங்களுக்கு நோட்ரைன்-
வெஸ்பாலினில் உள்ள ஆரம்பப் பாடசாலையில்
பெற்றோரின் பங்களிப்பு வாய்ப்புக்களைப் பற்றிய சிறிய
தொகுப்பொன்றைத் தருகிறோம்.

## பள்ளிப்பராமரிப்புக்குழு


தெரிவுசெய்யப்பட்ட எல்லா வகுப்புப்பராமரிப்
புக்குழுவின் தலைவர்களினதும் சந்திப்பு
பள்ளிப்பராமரிப்புக்குழு என்று சொல்லப்படுகிறது..
இந்தச்கந்திப்பிலும் திரும்பவும் ஒரு தலைவி அல்லது
தலைவன்அதுபோல பெண் அல்லது ஆண் பதில்
பிரதிநிதியும் தெரிவுசெய்யப்படுவார்கள்.




பள்ளிப்பராமரிப்புக்குழு எல்லாப் பெற்றோரினதும்
வேறுபட்ட கருத்துக்கள் விருப்பங்கள கதைப்பதற்கும்
வாக்களிப்பதற்கும் ஒரு பொருத்தமான வாதாடும் மன்ற
மாகும்.
தலைமை ஆசிரியர்.ஆலோசனையும் தகவலும்
வழங்குவதற்காக இந்தச் சந்திப்புக்களில் கலந்து
கொள்ளலாம்.
தலைமை ஆசிரியரால்.அடுத்துவரும்
பள்ளிக்கூட்டத்தில். சந்திக்கவிருக்கும் தீர்மானங்கள்
பள்ளிப்பராமரிப்புக்குழுவில்அறிமுகப்படுத்தப்படு
வதுடன் அவைபற்றி ஆலோசனையும் வழங்க
ப்படலாம். பள்ளிப்பராமரிப்புக்குழுவின்
தீர்மானங்கள் சொந்த விண்ணப்பங்களாக பள்ளிப்
பெருங்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படலாம்..
ஒரு பள்ளியின் முழு மாணவர் தொகையைப்
பொறுத்து பள்ளிப்பராமரிப்புக்குழு தனக்குள்
இருந்து மேலதிக பெண் ஆண் பிரதிநிதிகளைத்
தேர்ந்தெடுக்கும் அவர்கள் பள்ளிப்பராமரிப்புக்குழு
தலைவி அல்லது தலைவனுடன் சேர்ந்து
பள்ளிக்கூட்டத்தில் பங்குகொள்வார்கள்.

## பள்ளிக்கூட்டம்

ஆரம்பப்பள்ளியின் மேற்படியான பங்களிப்புக்குழு
பள்ளிக்கூட்டமாகும். இது பெற்றோரினதும்
ஆசிரியரினதும் பெண் ஆண் பிரதிநிதிகளால்
உருவாக்கப்பட்டது..
பெற்றோர் பிரதிநிதிகள் பள்ளிப்பராமரிப்
புக்குழுவினாலும் ஆசிரியர்களின் பிரதிநிதிகள்
ஆசிரியர்கூட்டத்தாலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.




பள்ளிக்கூட்டத்தில் முழுமையானதும் பரந்ததுமான
தீர்மானங்களும்மாற்றங்களும் எடுக்கப்படலாம்.
பள்ளிக்கூட்டத்தில் தலைமைஆசிரியைஅல்லது
தலைமைஆசிரியன் தலைமை தாங்குவர்.
அவள்அல்லது அவனுக்கு வாக்குரிமையில்லை
வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்பத்தில் மாத்திரம்
ஒரு தீர்மானத்திற்கு தலைமைஆசிரியரின் கருத்து
முக்கியமாகும்.
பிற்பக்கத்தில் என்எர்வே( NRW ) பள்ளிச்சட்டத்தின்
பந்தி 65 இல் சரியாகத் தீ ர்மானிக்கப் பட்ட
பள்ளிக்கூட்டத்தின் வேலைகளைப் பற்றிய நிறைய
விடயங்களை நீங்கள் காணலாம்.